**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 100** **நாள்: 25.07.2019**

**பெருநகர சென்னை மாநகராட்சி பெருங்குடி மண்டலம், பள்ளிக்கரணை குப்பை கொட்டும் வளாகத்தில் ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு.**

பெருநகர சென்னை மாநகராட்சி, பெருங்குடி மண்டலம், பள்ளிக்கரணை குப்பை கொட்டும் வளாகத்தில் உள்ள திடக்கழிவுகளை அகழ்ந்தெடுத்து பிரித்தெடுத்தல் மற்றும் சீரமைத்தல் பணிகள் நடைபெற்று வருவதை ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள், 24.07.2019 அன்று நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மை துறையின் மூலம் பெருங்குடி மண்டலம், கோட்டம்–186 பள்ளிக்கரணையில் 15 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள குப்பை கொட்டும் வளாகத்தில் பல ஆண்டுகளாக கொட்டப்பட்டு வந்த திடக்கழிவுகளை அகழ்ந்தெடுத்து அதிலுள்ள பயனுள்ள பொருட்களை பிரித்தெடுத்தல் மற்றும் சீரமைத்தல் பணிகளுக்கான ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இக்குப்பை கொட்டும் வளாகத்தில் 37509.81 கன மீட்டர் அளவிற்கு திடக்கழிகளை அகழ்ந்தெடுத்து சீரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. இங்கு நாளொன்றுக்கு 8 மணி நேரத்திற்கு 250 கனமீட்டர் அளவிற்க்கு குப்பை பிரித்தெடுக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

மேற்கண்ட பணிகளை நேரில் சென்று ஆய்வு செய்த ஆணையாளர் அவர்கள், இப்பணிகளை 4 மாத காலத்திற்குள் முடிக்க வேண்டும் என உத்தரவிட்டார்கள். பின்னர் அருகில் உள்ள 10 மெட்ரிக்டன் கொள்ளளவு கொண்ட குப்பைகளை உரமாக்கும் இரு நிலையங்களை ஆணையாளர் அவர்கள் பார்வையிட்டார். இவ்விரு நிலையங்களில் நாள்தோறும் முறையே 6 மெட்ரிக்டன் மற்றும் 3 மெட்ரிக்டன் அளவிற்கு குப்பைகள் உரமாக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

இவ்வாய்வின் போது தலைமை பொறியாளர் (கட்டடம்) திரு.என்.மகேசன், மேற்பார்வை பொறியாளர் (திடக்கழிவு மேலாண்மை) திரு.வீரப்பன், மண்டல அலுவலர், செயற் பொறியாளர் உட்பட மற்றும் பலர் உடன் இருந்தனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**